## கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திரு.ம.மரிய சகாய ஆண்டனி,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்.

இருப்பு : நாகர்கோவில்.

செயல்முறை ஆணை எண்.அ1/1098/2021 நாள்:29.04.2021

பொருள்: பணியமைப்பு - மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவில் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி IV பணிகள் - 2007-2008 முதல் 2012-2013 வரையுள்ள ஆண்டிற்கான தட்டச்சர் பணிநியமனம் செய்யப்பட்டது - திரு. முருகன், தட்டச்சர் அவர்களின் பணி வரன்முறை செய்து - ஆணையிடுவது - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித எண்.766/PSD/A4/2012 நாள்:07.02.2013.
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்.நிர்2/5303/2013(1) நாள்:22.02.2013.
3. சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரின் செயல்முறை ஆணை எண். அ1/1441/2013 நாள்: 03.05.2013.
4. திரு. வா. முருகன், தட்டச்சர் அவர்களின் பணியேற்புக் கடிதம் நாள்:03.05.2013.
5. மதுரை மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/2891/2016 நாள்: 03.06.2016.
6. செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9 அவர்களின் கடிதம் எண்.2689/CV-II(1)/2014-9 நாள்: 31.03.2021.
7. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண்.நிர்2/6704/2021 நாள்: 28.04.2021.

-------------

**ஆணைகள்:**

இவ்வலுவலகத்தில் தற்போது தட்டச்சராக பணிபுரியும் திரு. வா. முருகன், பார்வை 2-ல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணைப்படி சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 4-ல் காணும் கடிதம் வாயிலாக 03.05.2013 முற்பகல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 5-ல் காணும் மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு),மதுரை அவர்களின் செயல்முறை ஆணையின்படி (சொந்த விருப்பத்தின் பேரில்) நாகர்கோவில் மாவட்ட வேலைலவாய்ப்பு அலுவலகத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு 06.06.2016 முற்பகல் முதல் நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தட்டசராக பணிபுரிந்து வருகிறார்.

திரு.வா.முருகன், தட்டச்சர் அவர்களது சாதிச்சான்று மெய்த்தன்மை இதுநாள்வரை உறுதிப்படுத்தப் படாமல் கோப்பு தலைமைச் செயலகத்தில் நிலுவையில் இருந்த காரணத்தினால் தனியருக்கு பணி வரன்முறை செய்யப்படாமலும், வருடாந்திர ஊதிய உயர்வுகள் பெறப்படாமலும் பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில், பார்வை 6-ல் காணும் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9 அவர்களின் கடிதம் வாயிலாக சாதிச்சான்று மெய்த்தன்மை உறுதிசெய்து அறிக்கை பெறப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 7-ல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணையில் திரு. வா. முருகன், தட்டச்சர் அவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

.2.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்

இதனைத் தொடர்ந்து திரு.வா. முருகன் பணிசேர்ந்த நாளான 03.05.2013 அன்று முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பணி வரன்முறை செய்யப்பட்டது தொடர்பான விவரங்கள் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,<br>
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி<br>
வழிகாட்டும் மையம்,<br>
நாகர்கோவில்.

பெறுநர்:

திரு. வா. முருகன்,<br>
தட்டச்சர்<br>
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,<br>
நாகர்கோவில்.

நகல்:

பணிப்பதிவேடு.